# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு. எண்.206/2017/பே**
**ஆணை நாள். 02.07.2018**

திரு ஆர்.பழனியாண்டி,
த/பெ திரு . ராமசாமி,
16/97, மணியாபுரம்,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்–643 213 --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம். --- எதிர் மனுதாரர்

ஆணை.

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி, கோடேரி, 16/97 மணியாபுரம் கிராமத்தினைச் சேர்ந்த திரு ஆர். பழனியாண்டி, த/பெ திரு ராமசாமி, முறையீட்டு மனுதாரர் தனது நாளிடப்படாத முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2017 அன்று சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனு எண். 206/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்கண்ட குற்றச்சாட்டுகளை தெரிவித்து தனது மனுவின் மீது விசாரணைகோரி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தான் அதிகரெட்டி பேரூராட்சிக்குட்பட்ட மணியாபுரம் 16/97 காலனியில் வசித்து வருவதாகவும், தான் செயல் அலுவலரிடம் தனது வீடு மற்றும் பக்கத்து வீடுகள் சுமார் 5 வீடுகளுக்கு மழைக் காலங்களில் மண் சரிவு ஏற்படுவதாகவும் அதற்கு தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்கக் கோரி கோரிக்கை வைத்தும் நடவடிக்கை எடுக்காததை தொடர்ந்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் ஆணையத்திற்கு புகார் செய்தததாக தெரிவித்துள்ளார். தகவல்

ஆணையத்தினரால் அனுப்பிய சம்மனை ஏற்று, அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் தகவல் ஆணையத்தின் முன் ஆஜராகி மேற்படி தடுப்புச் சுவர் கட்டித் தருவதாக வாய் மொழியாக உறுதி அளித்துள்ளதாகவும் ஆனால் இதுவரை மேற்படி தடுப்புச் சுவர் கட்டித் தரவில்லை எனத் தெரிவித்து நடவடிக்கை கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 26.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 499/2017/நாள் 07.12.2017ன் மூலம் மேற்படி புகாருக்கான தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு ஆர். பழனியாண்டி, அதிகரெட்டி பேரூராட்சிக்குட்பட்ட, 16/97 மணியாபுரம் என்ற இடத்தில் வசிப்பதாகவும், தனது வீட்டின் பின்புறம் தடுப்பு சுவர் கட்டி தரக் கேட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளித்ததாகவும், தகவல் ஆணையம் 24.06.2013ல் நேரில் ஆஜராக கோரி உத்திரவிட்டதைத் தொடர்ந்து பேரூராட்சி செயல் அலுவலரும், நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் ஆஜராகி தனி நபர் வீட்டின் பாதுகாப்பிற்காக தடுப்பு சுவர் கட்டி கொடுக்க இயலாத நிலை உள்ளது குறித்தும், மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்றுவதில் உள்ள சிரமத்தினை எடுத்து கூறியதின் அடிப்படையில் மேற்படி வழக்கு முடித்து வைக்கப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சித் துறையில் தனி நபரின் வீட்டிற்கு தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லாததால் மனுதாரருக்கு தடுப்பு சுவர் கட்டித் தர இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் நீலகிரி மாவட்டம், மலை மாவட்டம் ஆனதாலும், மணியாபுரம் போன்ற குக்கிராமங்களில் உள்ள குடியிருப்புகள் தனித்தனியே மேலும் கீழுமாக அமைந்துள்ளதாகவும் அதனால் அனைத்து குடியிருப்புகளுக்கும் அதன் உரிமையாளர்களே பாதுகாப்பு சுவர் எழுப்பி பாதுகாக்கவேண்டும் எனவும் அனைத்து குடியிருப்புகளுக்கும் இப்பேரூராட்சியால் தடுப்பு சுவர் அமைத்திட வழி வகை ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.01.2018ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைத்து மேற்படி அறிக்கை குறித்தான ஆட்சேபணை / விளக்கத்தினை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது நாளிடப்படாத அறிக்கையின் மூலம் மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைக்கான தனது ஆட்சேபணை/விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள விவரங்களையே தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் தான் ஆதி திராவிடர்களுக்கு வழங்கிய வீட்டில் குடியிருப்பதாகவும், தனக்கு வருமானம் இல்லாத நிலையில் மேற்படி தடுப்பு சுவர் கட்டிக் கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்து தன்னைப் போல் தனது வீட்டின் அருகில் உள்ள மற்ற வீடுகளுக்கும் இதே நிலைதான் உள்ளது எனவும், தனி வீட்டிற்கு தடுப்புச் சுவர் கட்டித் தர வழி

வகை இல்லை எனவும், ஆனால் பல வீடுகளை பாதுகாக்கவேதான் தடுப்பு சுவர் கட்டித் தர கோரியதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 20.03.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் 17.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக, அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2018 அன்று ஆஜரான நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. S. நந்தகுமார் மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"..........தான் சோலூர் பேரூராட்சியின் செயல் அலுவலராகவும், அதிகரெட்டி பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரருடைய கோரிக்கை குறித்து தன்னால் 07.12.2017ல் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் அதற்கு பின்பு 02.01.2018 ல் ஒரு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் கோரிக்கை குறித்து நேரில் ஆய்வு செய்து பரிசீலினை செய்து தன்னுடைய அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் 17.05.2018 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ஆர்.பழனியாண்டி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

".........தனது முறையீட்டு மனுவில் தடுப்பு சுவர் கட்டிக் கொடுப்பதற்காக கோரிக்கை வைத்துள்ளதாகவும், தனது வீடு இருக்கும் பகுதி தான் கூறிய தடுப்பு சுவர் கட்டினால்தான் தனது வீட்டிற்கும் இல்லாமல் வேறு ஐந்து வீட்டிற்கும் பொது நன்மையாக இருக்கும் என தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 17.05.2018ம் தேதிய வாக்குமூலத்தின்படி 12.06.2018ம் நாளிட்ட அறிக்கையின் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

இம்மாவட்டம் மலை மாவட்டம் ஆனதாலும் மணிாயபுரம் போன்ற குக்கிராமங்களில் உள்ள குடியிருப்புகள் தனித்தனியே மேலும் கீழுமாக உள்ளதாலும் அனைத்து குடியிருப்புகளுக்கும் அதன் உரிமையாளர்களே பாதுகாப்பு சுவர் எழுப்பி பாதுகாக்கவேண்டும் எனவும் அனைத்து குடியிருப்புகளுக்கும் இப்பேரூராட்சியால் தடுப்பு சுவர் அமைத்திட வழிவகை ஏதும் இல்லை என தனது 02.01.2018 ம் நாளிட்ட கடிதம் மூலம் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் தான் 17.05.2018 அன்று உறுதி அளித்ததன் அடிப்படையில் சம்பந்தப்படட இடத்தினை நேரில் ஆய்வு செய்து மனுதாரரின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொருட்டு ரூ.8,50,000/- மதிப்பீட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிதி மூலமாகவும் மற்றும் வேறு அரசு திட்டங்களின் கீழ் பணிகள் மேற்கொளள கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை மனு, அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் நீலகிரி மாவட்டம், மணியாபுரம் போன்ற குக்கிராமங்களில் உள்ள குடியிருப்புகள்

மேலும் கீழுமாக தனித்தனியே அமைந்துள்ளதால் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் அதன் உரிமையாளர்களே பாதுகாப்பு சுவர் அமைத்திட வேண்டும் என தெரிவித்துள்ளார். இருப்பினும் மனுதாரரின் கோரிக்கையினை ஏற்கும் வண்ணம் மேற்படி இடத்தினை ஆய்வு செய்து நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு ரூ.8,50,000/– மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியரின் நிதி மற்றும் மற்றும் வேறு அரசு நிதி மூலம் தடுப்பு சுவர் அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவித்து தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையினை ஏற்றும் மேற்படி நிதி ஒதுக்கீட்டினை கண்காணித்து மனுதாரின் கோரிக்கையினை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கத் தெரிவித்தும், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று பேரூராட்சியால் உரிய நடவடிக்கை எடுத்திட்ட நிலையில் இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தின் தொடர் நடவடிக்கை கைவிடப்படுகிறதென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திரு. ஆர். பழனியாண்டி,
த/பெ திரு . ராமசாமி,
16/97, மணியாபுரம்,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்–643 213 .

2.பேரூராட்சி செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம்,
நீலகிரி.